வதும் நோன்பு வைத்தார்கள் என்று கூறுமள வுக்கு சில சமயம் நோன்பு நோற்பார்கள். அதே போல் சில சமயம் நோன்பு நோற்க மாட் டார்கள் எனக் கூறும் அளவுக்கு நோன்பின்றியும் இருப் பார்கள். நபியவர்கள் ரமழானில் மாத்திரம்தான் மாதம் முழுவதும் நோன்பு நோற்றிருக்கின்றார் கள். அதனையடுத்து ஷஃபானைத் தவிர வேறு எந்த மாதத்திலும் அவர்கள் அதிக நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை.'' (புஹாரி)

உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் நபி காளரிடம்: ''இறைத்தூதர் அவர்களே! நீங்கள் ஷஃபான் மாதத்தில் போன்று வேறெந்த மாதத் திலும் நோன்பு நோற்பதை நான் கண்டதில் லையே! எனக் கேட்டேன். அதற்கு அவர்கள் ''ரஜப் மற்றும் ரமழான் ஆகிய இரண்டு மாதங் களுக்கிடையில் (ஷஃபானாகிய) இம்மாதத்தை மனிதர்கள் மறந்துவிடுவர், அடியார்களது செயல் கள் இறைவனிடம் எடுத்துக் காண்பிக்கப்படும் மாதம் இது. எனவே நான் நோன்பாளியாக இருக்கும் போது எனது செயல்கள் இறைவ னிடம் உயர்த்தப்படுவதை விரும்புகிறேன்'' எனக் கூறினார்கள். (நஸாஈ)

இந்த ஹதீஸ் முக்கிய மூன்று விடயங்களை கற்றுத்தருகின்றது:

1. நன்மையான விடயங்களை தேடிப் பெறு வதில் நபித்தோழர்களிடம் அலாதியான ஆர்வம் காணப்பட்டது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு செயலையும் அச்சொட்டாக பின் பற்ற வேண்டும் என்றவகையில் அவர்களின் அனைத்து வாழ்வியல் நிலைகளையும் கூர்ந்து அவதானித்துள்ளனர். எனவேதான் இந்த நபித் தோழர் இறைதூதர் (ஸல்) அவர்கள் ஷஃபான் மாதத்தில் அதிகம் நோன்பு வைத்ததை அவ தானித்து அதன் தார்ப்பரியத்தை அறிந்து கொள் வதற்காக வெட்கப்படாமல் கேள்வியை தொடுக் கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நபி (ஸல்) அவர்கள் ஷஃபான் மாதத்தில் நோன்பு நோற்பதற்கான காரணம் பற்றி விளக்கும் போது ''அந்த மாதம் ரமழானுக்கும் ரஜபுக்கும் இடையில் மக்கள் மறந்துபோக முடியுமான ஒரு மாதமாகும்'' எனக் குறிப்பிட்டார்கள். காரணம் ஷஃபானுக்கு முந்தியமாதமான புனித ரஜப் மாதம் கண்ணியப்படுத்தப்பட்ட நான்கு மாதங்களில் ஒன்றாகும், அதற்குப் பின்னால் வரக் கூடிய மாதம்; பாக்கியம் நிறைந்த புனித ரமழான் மாதமாகும். எனவே இந்த இருமாதங்களுக்கிடையில் ஷஃபான் காணப்படுவதால் மனிதர்கள் இம்மாதத்திற்கு கவனம் செலுத்தத் தவறி விடுகின்றார்கள்.

3. மக்கள் மறந்து கவனம் செலுத்தத் தவறும் காலப்பகுதிகளில் அதனை நன்மைகள் கொண்டு உயிர்ப்பிப்பது விரும்பபத்தக்க செயலாகும். அப்படியான சந்தர்ப்பங்களில் செய்யப்படும் வணக்க வழிபாடுகளுக்கு பாரிய கூலியுமுண்டு.

மேற்கூறிய ஹதீஸின் அடிப்படையில் ஷஃபான் மாதம் ரமழானுக்கான பாதையாகும். மேலும் ஈமானிய உணர்வுகளையும் இறை தொடர்பையும் பெறுவதற்கான பயிற்சிக்களமாகும். அந்த மாதத்திற்கு ஒரு அந்தஸ்து உண்டு. அதனால் தான் அந்த மாதத்தை மறக்காமல் உயிர்ப்பிக்குமாறு நபிகளார் தூண்டியுள்ளார்கள். அந்த மாதத்தை வணக்க வழிபாடுகளால் அலங்கரிப்பது ஒரு சுன்னா என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே தான் ஸாலிஹான நல்லடியார்கள் இந்த மாதத்திற்கு கூடுதல் கரிசனை கொடுத்து உயிர்ப்பித்துள்ளார்கள். ரமழானுக்கான பயிற்சிப் பாசறையான ஷஃபான் மாத வணக்க வழிபாடுகள் சுன்னாவை மீறிய அல்லது சுன்னாவுக்கு பொருந்தாத அமல்களாக அமைந்து விடக் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷஃபான் மாதம் ரமழானுக்கான பாதையாகும். மேலும் ஈமானிய உணர்வுகளையும் இறை தொடர்பையும் பெறுவதற்கான பயிற்சிக்களமாகும். அந்த மாதத்திற்கு ஒரு அந்தஸ்து உண்டு. அதனால் தான் அந்த மாதத்தை மறக்காமல் உயிர்ப்பிக்குமாறு நபிகளார் தூண்டியுள்ளார்கள். அந்த மாதத்தை வணக்க வழிபாடுகளால் அலங்கரிப்பது ஒரு சுன்னா என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே தான் ஸலாலிஹான நல்லடியார்கள் இந்த மாதத்திற்கு கூடுதல் கரிசனை கொடுத்து உயிர்ப்பித்துள்ளார்கள். ரமழானுக்கான பயிற்சிப் பாசறையான ஷஃபான் மாத வணக்க வழிபாடுகள் சுன்னாவை மீறிய அல்லது சுன்னாவுக்கு பொருந்தாத அமல்களாக அமைந்து விடக் கூடாது.

வெளியீடு: مركز السلامة MARKAZUS SALAMAH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org